ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த பெருமாள் திருமோழி

# 2 – தேட்டருந்திறல்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 2 – தேட்டருந்திறல்

‡ தேட்டருந் திறல் தேனினைத் ⋆
தென் அரங்கனைத் ⋆
திரு மாது வாழ் வாட்டம் இல் வனமாலை மார்வனை வாழ்த்தி ⋆
மால் கொள் சிந்தையராய் ⋆
ஆட்ட மேவி அலந்தழைத்து ⋆
அயர்வெய்தும் மெய் அடியார்கள் தம் ⋆
ஈட்டம் கண்டிடக் கூடுமேல் ⋆
அது காணும் கண் பயன் ஆவதே ‖ **2.1** ‖

தோடுலா மலர் மங்கை தோள் இணை தோய்ந்ததும் ⋆
சுடர் வாளியால் ⋆
நீடுமா மரம் செற்றதும் நிரை மேய்த்ததும் ⋆
இவையே நினைந்து ⋆
ஆடிப்பாடி அரங்கவோ என்றழைக்கும் ⋆
தொண்டரடிப் பொடி ஆடநாம் பெறில் ⋆
கங்கை நீர் குடைந்தாடும் ⋆
வேட்கை என் ஆவதே ‖ **2.2** ‖

ஏறடர்த்ததும் ஏனமாய் நிலம் கீண்டதும் ⋆
முன் இராமனாய் ⋆
மாறடர்த்ததும் மண் அளந்ததும் ⋆
சொல்லிப் பாடி ⋆
வண் பொன்னிப் பேர் ஆறு போல் வரும் கண்ண நீர் கொண்டு ⋆

அரங்கன் கோயில் திரு முற்றம் ⋆
சேறு செய் தொண்டர் சேவடிச் ⋆
செழும் சேறென் சென்னிக்கணிவனே ॥ **2.3** ॥

தோய்த்த தண் தயிர் வெண்ணெய் பாலுடன் உண்டலும் ⋆
உடன்றாய்ச்சி கண்டு ⋆
ஆர்த்த தோள் உடை எம்பிரான் ⋆
என் அரங்கனுக்கடியார்கள் ஆய் ⋆
நாத் தழும்பெழ நாரணா ! என்றழைத்து ⋆
மெய் தழும்பத் தொழுதேத்தி ⋆
இன்புறும் தொண்டர் சேவடி ⋆
ஏத்தி வாழ்த்தும் என் நெஞ்சமே ॥ **2.4** ॥

பொய் சிலைக் குரல் ஏற்றெருத்தம் இறுத்துப் ⋆
போர் அரவீர்த்த கோன் ⋆
செய் சிலைச் சுடர் சூழ் ஒளித் ⋆
திண்ண மா மதிள் தென் அரங்கனாம் ⋆
மெய் சிலைக் கரு மேகம் ஒன்று ⋆
தம் நெஞ்சுள் நின்று திகழப் போய் ⋆
மெய் சிலிர்ப்பவர் தம்மையே நினைந்து ⋆
என் மனம் மெய் சிலிர்க்குமே ॥ **2.5** ॥

ஆதி அந்தம் அனந்தம் அற்புதம் ஆன ⋆
வானவர் தம் பிரான் ⋆
பாதமா மலர் சூடும் பத்தி இலாத ⋆
பாவிகள் உய்ந்திட ⋆
தீதில் நன்னெறி காட்டி ⋆
எங்கும் திரிந்தரங்கன் எம்மானுக்கே ⋆

காதல் செய் தொண்டர்க்கெப்பிறப்பிலும் ⋆
காதல் செய்யும் என் நெஞ்சமே ‖ **2.6** ‖

கார் இனம் புரை மேனி நற் கதிர் ⋆
முத்த வெண்ணகைச் செய்ய வாய் ⋆
ஆர மார்வன் அரங்கன் என்னும் ⋆
அரும் பெரும் சுடர் ஒன்றினைச் ⋆
சேரும் நெஞ்சினர் ஆகிச் சேர்ந்து ⋆
கசிந்திழிந்த கண்ணீர்களால் ⋆
வார நிற்பவர் தாள் இணைக்கு ⋆
ஒரு வாரம் ஆகும் என் நெஞ்சமே ‖ **2.7** ‖

மாலை உற்ற கடல் கிடந்தவன் ⋆
வண்டு கிண்டு நறுந் துழாய் ⋆
மாலை உற்ற வரைப் பெருந் திருமார்வனை ⋆
மலர்க் கண்ணனை ⋆
மாலை உற்றெழுந்தாடிப் பாடித் ⋆
திரிந்தரங்கன் எம்மானுக்கே ⋆
மாலை உற்றிடும் தொண்டர் வாழ்வுக்கு ⋆
மாலை உற்றதென் நெஞ்சமே ‖ **2.8** ‖

மொய்த்துக் கண் பனி சோர மெய்கள் சிலிர்ப்ப ⋆
ஏங்கி இளைத்து நின்று ⋆
எய்த்துக் கும்பிடு நட்டம் இட்டெழுந்து ⋆
ஆடிப் பாடி இறைஞ்சி ⋆
என் அத்தன் அச்சன் அரங்கனுக்கு ⋆
அடியார்கள் ஆகி ⋆

அவனுக்கே பித்தராம் அவர் பித்தர் அல்லர்கள் ⋆
மற்றையார் முற்றும் பித்தரே ॥ **2.9** ॥

‡ அல்லி மா மலர் மங்கை நாதன் ⋆
அரங்கன் மெய் அடியார்கள் தம் ⋆
எல்லை இல் அடிமைத் திறத்தினில் ⋆
என்றும் மேவு மனத்தனாம் ⋆
கொல்லி காவலன் கூடல் நாயகன் ⋆
கோழிக்கோன் குலசேகரன் ⋆
சொல்லின் இந் தமிழ் மாலை வல்லவர் ⋆
தொண்டர் தொண்டர்கள் ஆவரே ॥ **2.10** ॥

அடிவரவு — தேட்டு தோடு ஏறு தோய்த்த பொய் ஆதி காரினம் மாலை மொய்த்து அல்லி மெய்

தேட்டருந்திறல் முற்றிற்று

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்